செ.வெ.எண்:17 நாள்: 09.09.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க மாத்திரைகள் (National Deworming Day 2020) வழங்கும் முகாம் முதல் சுற்று 14.09.2020 முதல் 19.09.2020 (திங்கள், வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமை) வரை, இரண்டாவது சுற்று 21.09.2020 முதல் 26.09.2020 வரை (திங்கள், வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமை) மேற்கண்ட நாட்களில் விடுபட்ட குழந்தைகளுக்கு சிறப்பு முகாமில் (Mop up Day) 28.09.2020 அன்று குடற்புழு நீக்க மாத்திரைகள், அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடைபெற உள்ளது.

இம்முகாமில் 1 வயது முதல் 19 வயது வரையிலான சுமார் 1,99,276 குழந்தைகள் மற்றம் வளர் இளம் பருவத்தினர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட உள்ளது. முகாமில் பொது சுகாதாரத்துறை பணியாளர்களான 114 கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் 143 மருத்துவப்பணியாளர்கள் மற்றும் 714 அங்கன்வாடிப்பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணிபுரிய உள்ளனர்.

1 முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 200 mg (1/2 மாத்திரை) 2 வயது முதல் 19 வயது உள்ள குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினர்களுக்கு 400 mg (முழு மாத்திரை) வழங்கப்பட உள்ளது. குடற்புழு நீக்கத்தினால் குழந்தைகளுக்கு இரத்தசோகை நோய் வராமல் தடுக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது, அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.

இம்மாவட்டத்தில், பள்ளி ஆசிரியர்க, அங்கன்வாடி மைய பணியாளர்கள், பள்ளி நிர்வாக குழுவினர், பெற்றோர் ஆசிரியர் கழக சங்கத்தினர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்கள் குடற்புழு நீக்க மாத்திரையின் பயன் பற்றியும், மாத்திரைகள் கொடுக்கப்படும் நாள் பற்றியும் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் எடுத்துக்கூறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**